05.04.2025

OS No: 548/2019

வா.சா.2 திரு. கண்ணன் , த/பெ. மாடசாமி

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது பெயர் என்ன என்றால் கண்ணன். சா.சா.ஆ.1 சாட்சி கையெழுத்து என்னுடையது தானா என்றால் என்னுடையது தான். வா.சா.ஆ.4 புறக்குறிப்பு சங்கதியை யார் எழுதியது என்றால் வாதி நாச்சியப்பன் எழுதினார். புறக்குறிப்பு சங்கதி எழுதிய தேதியில் வா.சா.ஆ.1ல் கண்ட சங்கதிகள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சிகையெழுத்து செய்து அதன் கீழே தேதி எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். புறக்குறிப்பு எழுதி அதில் கையெழுத்து செய்த நபர் யார் என்பது குறித்தோ, அவருடைய அடையாளம் குறித்தோ அறிந்துகொள்ள அவருடைய ஆதார் அட்டை ஆவணத்தையோ, வாக்காளர் அடையாள அட்டை ஆவணத்தையோ சரிபார்த்து விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 மேற்குறிப்பு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வாதியின் கடையில் வைத்து எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் டைம் தெரியாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பேக்கரி தொழில் செய்கிறேன். புறக்குறிப்பு எழுதிய தேதியான 03.07.2019ம் தேதி நான் வேலைக்குச் சென்றிருந்தேனா என்றால் ஆமாம். பிரதிவாதி நான் சொல்வது போன்று புறக்குறிப்பில் கையெழுத்து செய்யவில்லை என்றும் நான் வாதிக்கு வேண்டிய நபர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு அழைத்தது வாதி என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.05 18:23:01 +0530